# காது கேளாமை



புறச்செவி

நடுச்செவி

உட்செவி

பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடு தடுப்புத் துறை


அனைத்திந்திய பேச்சு மற்றும் கேட்புத்திறன் கழகம்

மானசகங்கோத்திரி, மைசூர்-570006

தொலைபேசி எண்: 0821–2502000, தொலைநகல்: 0821–2510515

மின்னஞ்சல் முகவரி: director@aiishmysore.in

வலைதளம்: www.aiishmysore.in

## காது கேளாமை என்றால் என்ன?

- செவித்திறன் ஒரு காதிலோ அல்லது இரு காதிலுமோ குறைதல்
- காது கேளாமை தொடங்கும் வயது: பிறப்பிற்கு பிறகு எந்த வயதிலும்
- செவித்திறனிழப்பின் வகைகள்: கடத்து வகை செவித்திறனிழப்பு (புறச்செவி மற்றும் / அல்லது நடுச்செவியோடு தொடர்புடையது), உணர்வு நரம்பு செவித் திறனிழப்பு (உள்செவியோடு தொடர்புடையது), கலப்பு செவித்திறனிழப்பு (புற அல்லது நடு மற்றும் உள்செவி தொடர்புடையது), மற்றும் செவிப்பறை (மூளை வரை செல்லும் செவிப்பறை நரம்பின் வழியில் எங்காவது) செயல் குறைபாடு




- செவித்திறனிழப்பின் அளவு; செவித்திறனில் எந்த அளவுக்கு பிரச்சினை இருக்கிறது என்பதைப் பொருத்து இது அமையும். இதை டெசிபல் (decibel-dB) அளவீட்டால் கீழ்கண்டவாறு அளவிடப்படுகிறது;
  - -10 லிருந்து 15 டெசிபல் HL வரை ; சரியான செவித்திறன் உணர்வு (Normal)
  - 16 லிருந்து 25 டெசிபல் HL வரை; குறைந்த அளவு செவித்திறனிழப்பு (Minimal)
  - 26 லிருந்து 40 டெசிபல் HL வரை; இளநிலை செவித்திறனிழப்பு (Mild)
  - 41 லிருந்து 55 டெசிபல் HL வரை ; மிதமான செவித்திறனிழப்பு (Moderate)
  - 56 லிருந்து 70 டெசிபல் HL வரை ; மிகுநிலையடைந்த/முதிர்நிலை மிதமான செவித்திறனிழப்பு (Moderately severe)
  - 70 லிருந்து 90 டெசிபல் HL வரை ; மிகையான செவித்திறனிழப்பு (Severe)
  - >90 டெசிபல் HL ஆழ்ந்த செவித்திறனிழப்பு (Profound)

### செவித்திறன் இழப்பிற்கான காரணங்கள்;

பல காரணங்களால் செவித்திறனிழப்பு ஏற்படலாம், எடுத்துக்காட்டாக

- செவித் தொற்றுகள்
- வயதாகுதல்
- குடும்ப மரபு வழியாக செவித்திறன் இழப்பு ஏற்படுதல்
- காயம், விபத்து, அடிபடுதல் மூலமாக காதுகளில் காயம் ஏற்படுவதால்





- குழந்தை பிறக்கும் முன்பும், குழந்தை பிறப்பின் போதும், குழந்தை பிறப்பிற்கு பிறகும் ஏற்படும் தொற்றுகள்



- கொண்டை ஊசி, பென்சில் முனை, கற்கள், தீக்குச்சிகள் போன்றவற்றை காதினுள் செருகுவதால்
- காதுகளுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய குறிப்பிட்ட மருந்துகளைப் பயன்படுத்துதல் (செவிநச்சு)



- சில சமயங்களில் தெரியாத காரணங்களினால் கூட செவித்திறனிழப்பு ஏற்படுகிறது.
- நீண்டகாலம் உரத்த இரைச்சலை கேட்டுக்கொண்டிருப்பதன் மூலம் செவித்திறன் இழப்பு ஏற்படுகிறது. (எ.கா. தொழிற்சாலை இரைச்சல், உரத்த இசை முதலியன) திடீரென காதில் விழும் பெரும் சத்தம் (எ.கா. பட்டாசு சத்தம், துப்பாக்கிச் சத்தம்)

## செவித்திறன் இழப்பின் அறிகுறிகள்

- கேட்பதில் சிரமம்
- திரும்பத் திரும்பச் சொல்லுமாறு கேட்டல்



- உரையாடலைப் புரிந்துகொள்வதில் சிரமம் / குழுவில் /இரைச்சலில் இருக்கும்போது பேச்சைப் புரிந்துகொள்வதில் சிரமம்







- காது வலி அல்லது காதில் சீழ்வடிதல்





- மணி ஒலி அல்லது தேனீக்கள் ரீங்காரமிடும் சத்தம் போல் காதில் கேட்டல்
- தன்னைச் சுற்றியுள்ள மக்கள், தெளிவாகப் பேசவில்லை என்ற உணர்
- சத்தம் வரும் திசையைக் கண்டுபிடிப்பதில் சிரமம்
- காதடைப்பு மற்றும் அரிப்பது போன்ற உணர்வு காதில் ஏற்படுதல்
- தலைச்சுற்றல் மற்றும் சமநிலை (Balance) பிரச்சினைகள்

## செவித்திறன் இழப்பைத் தடுத்தல்

- குறிப்பிட்ட தொற்றுகளுக்கு எதிராக நோய்எதிர்ப்புத் (Vaccination) திறனூட்டல் (எ.கா. மூளைக்காய்ச்சலுக்கு எதிராக)
- இரைச்சலான சூழலில் வேலை செய்யும்போது செவித்திறன் பாதுகாப்பு (Hearing protection devices -HPDs) கருவிகளைப் பயன்படுத்துதல்





- மூக்கு, தொண்டை மற்றும் காது தொற்றுகளுக்கு உடனடி மருத்துவ கவனம் செலுத்துதல்
- காதினுள் நீரோ எண்ணையோ புகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் (நீச்சல் அடிக்கும் போதோ குளிக்கும் போதோ)
- காதுகளைச் சுத்தம் செய்ய கொண்டை ஊசி அல்லது தீக்குச்சி போன்ற கூரிய பொருள்களைப் பயன்படுத்தாமல் இருப்பது

## செவித்திறன் இழப்பை கட்டுப்படுத்துதல்

காதில் எந்த இடத்தில் மற்றும் எந்த அளவிற்குக் குறைபாடு உள்ளதோ அதனை சார்ந்துதான் அதனை கட்டுப்படுத்த முடியும். புறச்செவி மற்றும்/அல்லது நடுச்செவியில் பிரச்சினை இருந்தால் மருந்து மற்றும் அறுவை சிகிச்சையைக் காது மூக்கு தொண்டை மருத்துவரின் (ENT) மூலம் கொடுத்து குணப்படுத்தலாம். மருந்து அறுவைசிகிச்சை பயனுள்ளதாக இல்லாவிடில் அல்லது காது குறைப்பாடு உள்செவியில் இருந்தால் கேள் அவையிலாளரின் பரிந்துரையின் படி காது செவிக்கருவிகள் [(காதுக்கருவி (Hearing aid), கேள்வித்திறன் உதவிக்கருவிகள் (Assistive Listening devices ALDs), நத்தை வடிவ சுருள்குழாய் கருவி (cochlear implant)] பயன்படுத்துதல் உதவும். ஒருவேளை பிறவியிலேயே செவித்திறன் இழப்பு இருந்தால், அந்த குழந்தைகளுக்குப் பொருத்தமான செவித்கருவிகளின் உதவியுடன் கேள்வி மற்றும் பேச்சு மொழி சிகிச்சை வழங்கப்பட வேண்டும்.


மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

அனைத்திந்திய பேச்சு மற்றும் கேட்புத்திறன் கழகம்
நைமிஷம் வளாகம், மானசகங்கோத்திரி, மைசூர்-570006
தொலைபேசி எண்; 0821-2514446, மின்னஞ்சல் முகவரி ; director@aiishmysore.in
இலவச அழைப்பு எண்; 1800 4255218
வேலை நாட்கள்; திங்கள்-வெள்ளி (காலை 9 மணி-மாலை 5-30 மணி)
(நடுவண் அரசின் விடுமுறை நாட்களைத் தவிர)
www.aiishmysore.in



மின்னஞ்சல் முகவரி : director@aiishmysore.in